

# தேவனுடைய பிள்ளையாக









# இருப்பது எப்படி

**சாட்சி பதிப்பு**

**உங்கள் கதையைச் சொல்வது எப்படி மற்றும் சாட்சியாயிருப்பது எப்படி ஆகிய பகுதிகளைக் கொண்டது**

# தேவனுடைய பிள்ளையாக இருப்பது எப்படி

## டேவிட் ஹோவெல்

## இந்த ஊழியத்தைத் தாங்குங்கள்

சிறைச்சாலை சுவிசேஷ ஊழியம், அமெரிக்காவில் 20,00,000 சிறைக்கைதிகளைக் கொண்ட 2100 சிறைச்சாலைகளில், **தேவனுடைய பிள்ளையாக இருப்பது எப்படி** என்னும் கைப்பிரதியை அச்சிட்டு விநியோகம் செய்து வருகிறது. மனித மனங்களை மாற்றி, சிறைச்சாலைகளை மூடுவதுதான் எங்களது நோக்கம். கிறிஸ்துவின் மீதான அன்பு மற்றும் நம்பிக்கையின் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும். மனமாற்றம் ஏற்படாவிட்டால் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் வெளியே வந்தவர்களில் எழுபது சதவிகிதத்தினர் மீண்டும் சிறைச்சாலைக்குத் திரும்பக் கூடும்.

சிறைக்கைதிகளை நிரந்தரமாக விடுவிக்க உங்கள் நிதி உதவியின் மூலம் எங்களைத் தாங்குங்கள்.

உங்கள் ஊழியங்களுக்கான புத்தகங்களை **howtobeachildofgod.com** என்ற இணையதளத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

இந்த ஊழியத்திற்கான உங்கள் நன்கொடைகளை **prisonevangelism.com** என்ற இணையதளத்தில் நேரடியாக செலுத்தலாம்.

ஃபேஸ்புக்: @ Prison Evangelism, Inc. மற்றும் @How to be a child of God

உங்கள் காசோலையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்:

Prison Evangelism
PO Box 571977
Houston, Texas 77257

பதிப்புரிமை © 2019 டேவிட் ஹோவெல்

வேறு யாருக்கும் பதிப்புரிமை இல்லை. டேவிட் ஹோவெல் அவர்களின் அனுமதியின்றி இந்தப் பதிப்பின் எந்தப் பகுதியையும் எவ்விதத்திலும் அச்சிடக் கூடாது.

இந்தப் புத்தகத்தை கல்வி ஸ்தாபனங்களுக்கும், சுவிசேஷ ஊழியங்களுக்கும் மொத்தமாக வாங்கிக் கொள்ளலாம். மேலும் தகவலுக்கு பதிப்பாளரை அணுகவும்.

David Howell
PO Box 571977
Houston, Texas 7725
davidhowell@aol.com
info@HowtobeaChildofGod.com www.HowtobeaChildofGod.com

இந்த மின்புத்தகத்தையும், காணொளியையும் பார்க்க
@ WWW.PRISONEVANGELISM.COM

வேதப்பகுதிகள் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

ISBN: 978-0-578-14157-2

வரைபட இயக்கம்: ஜான் மாகி, ஹூஸ்டன், டெக்சாஸ்
JohnMageeDesign.com

உதாரணங்கள்: ராண்டி ரோஜர்ஸ், த வுட்லேண்ட்ஸ், டெக்சாஸ் artistguy@att.net

## அறிமுகம்

“கிறிஸ்துவையும், அவருடைய சிலுவையையும் பற்றிய முழு விபரமும் நமக்குக் கிடைத்துவிட்டால், நம் கிறிஸ்தவ வாழ்க்கையை முதல் நாளிலிருந்தே நிறைவான அனுபவத்துடன் ஆரம்பிக்கலாம். ஆனால், இவற்றைப் பற்றிய அதிகமான மற்றும் முழு விபரங்கள் போகப்போகத்தான் நமக்குக் கிடைக்கும்.

வாட்ச்மன் நீ, த நார்மல் கிறிஸ்டியன் லைஃப்

இயேசு கிறிஸ்துவை கர்த்தராகவும், தேவனாகவும், இரட்சகராகவும், வாழ்வாகவும் ஏற்றுக்கொண்டு அவர் மீது நம்பிக்கை வைக்கும்போது, நம் சித்தத்தையும் வாழ்க்கையையும் அவர் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவரிடம் கேட்டுக் கொள்ளவும் செய்கிறோம். உண்மையில், அவரே நம் வாழ்வாகிறார். நாம் மறுரூபமடைகிறோம்; சிலசமயங்களில் துரிதமாகவும், மற்றும் சில நேரங்களில் மெதுவாகவும் மாறினாலும், நிச்சயமாக மாற்றம் வரும். தேவனுடைய ஆவியானவர் தாமே நமக்குள் வாழும்படி வந்து, நம்மை முழுமையாக்கவும், பிழைத்திருக்கவும், பூரணப்படவும் செய்கிறார். நாம் தேவனை விசுவாசித்து, நம் இதயங்களை அவரிடம் கொடுத்துவிடும்போது, வாழ்க்கை இனி முன்பிருந்தது போல இருப்பதில்லை.

டேவிட் ஹோவெல்

பரலோகத்திலிருந்த தேவன் ஒரு மனிதனாக பூமிக்கு வந்தார்.



பிலிப்பியர் 2:6-8, யோவான் 1:14, எபிரெயர் 1:3, ரோமர் 8:3ஆ, யோவான் 10:30, கொலோசெயர் 1:15  கொலோசெயர் 2:9, எபிரெயர் 2:11-17, மத்தேயு 1:20-21

அவர் அற்புதவிதமாக உருவாகியிருந்தாலும், நம்மைப் போலவே ஒரு பெண்ணின் வயிற்றிலிருந்து பிறந்தார்.



குழந்தைப் பருவத்தையும் வாலிபப் பருவத்தையும் கடந்து வந்து ஒரு தொழிலையும் கற்றுக் கொண்ட இயேசு தாம் செய்வதற்காக வந்த ஊழியத்தைச் செய்யும் நேரம் வந்தபோது அதைச் செய்யத் தொடங்கி, நம் அனைவருக்கும் தம்மை தேவனாகவும் இரட்சகராகவும் வெளிப்படுத்தினார்.




மத்தேயு 3:13-17, மத்தேயு 7:28-29, மாற்கு 6:2-3, லூக்கா 2:40, லூக்கா 2:41-47, லூக்கா 2:52


இந்த உலகத்தில் தம் நோக்கத்தை நிறைவேற்றி முடித்த இயேசு



சிலுவையில் அறையப்படும்படி தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். அவரைச் சிறுமைப்படுத்தி, சித்ரவதை செய்து, சிலுவையில் அறைந்தார்கள். நீங்களும் நானும் நாம் செய்த பாவங்களுக்கான பரிகாரத்தைச் செலுத்த அவசியமில்லாதபடி, இத்தகைய மிகக் கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவர் தாம் அனுபவித்தவைகளின் பலனை நம் அடையாளமாகக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். தேவன் மட்டுமே அறிந்த விதத்தில், இயேசு கிறிஸ்து செலுத்திய பலியும், அவரது இரத்தமும் நம்முடைய பாவங்களைக் கழுவி, என்றென்றைக்குமாக நம்மைச் சுத்திகரிக்கின்றன. இயேசுவைப் போலவே தேவன் நம்மையும் தம் பிள்ளைகளாகப் பார்க்கத்தக்கதாக முற்றிலும் அன்பான இந்தச் செய்கை நம்மைத் தூய்மைப்படுத்துகிறது.



மத்தேயு 26:28-29, மத்தேயு 27:57-61, ரோமர் 5:6, ரோமர் 8:3, எபேசியர் 1:7 எபிரெயர் 2:14-15, எபிரெயர் 9:22, 1 பேதுரு 2:24, 1 யோவான் 1:7




பின்னர் மீண்டும் அவர் பரலோகத்திற்குத் திரும்பினார். நாம் அவருடன் தனிப்பட்ட விதத்தில் உறவு கொண்டிருக்கவும், நமக்கு நித்திய வாழ்வு என்னும் பரிசைக் கொடுக்கவுமே இயேசு வந்தார். நித்திய வாழ்வு என்பது கிறிஸ்துவின் வாழ்வு. **அதற்கு துவக்கமும் முடிவும் இல்லை.**

 லூக்கா 24:1-7, லூக்கா 24:50-51, யோவான் 16:28, எபிரெயர் 1:3

இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று அவருக்கு அவசியமென்ன? ஏனென்றால், தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை படைத்தபோது, அவனுக்கு பரதீசில் ஒரு அருமையான வாழ்வைக் கொடுத்தார். ஆனால் ஆதாமோ தன் பரம தகப்பனுக்குக் கீழ்ப்படியாமல் போனான்.




அதுமுதல், மனிதன் சரீரத்தையும், ஆத்துமாவையும் (ஆள்தத்துவம்) கொண்டிருந்தாலும், தேவனுக்கு முன்பாக அவனுடைய ஆவி மரித்திருந்தது. முழுமையை இழந்த அவன் தேவன் வைத்திருந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாமல் போயிற்று.

ஆதியாகமம் 2:8-9, ஆதியாகமம் 3:2-6, ஆதியாகமம் 2:16-17,
ஆதியாகமம் 3:23, I கொரிந்தியர் 15:45-46

நம் பெற்றோருக்குப் பிள்ளைகளான நம்முடைய வம்சம் ஆதாமிலிருந்து தொடங்குகிறது.



ஏதேன் தோட்டத்தில் ஆதாமுடன் நாமும் ஆவியில் மரித்துப் போனோம்.நாம் அந்த வம்சத்தின் பாரங்களையும், நம்முடைய பாவ பாரங்களையும், இந்த உலகத்தில் வாழும்போது நமக்கு ஏற்படுகிற உணர்வுபூர்வமான பாரங்களையும் சுமந்து கொண்டிருக்கிறோம். அது, அவமானம், குற்ற உணர்வு, கடந்த கால பிரச்சனைகள், தடைகள், மற்றும் நம் பாவங்களையும் குணத்தில் உள்ள குறைவுகளையும் குறித்த மோசமான உணர்வுகள் ஆகிய குப்பைகளைக் கொண்ட ஒரு பை போல இருக்கிறது. எனவே, நமக்கு ஒரு புதிய வம்சமும் புதிய குடும்பமும் அவசியமாகிறது.


ரோமர் 3:23, ரோமர் 5:12, ரோமர் 5:18அ



ஒருநாள், ஒருவர் வந்து இயேசுவின் கதையைச் சொன்னார். இயேசு நமக்காக மரித்து, நமக்குத் தம் நித்திய வாழ்வைக் கொடுத்ததன் மூலம் எவ்வாறு நம் அனைவரையும் நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றினார் என்று அவர் விளக்கினார். நமக்கு ஒரு வழியைத் திறக்கும்படியாகவும், முழுமையான மன்னிப்பையும், நிபந்தனையற்ற அன்பையும், நித்திய வாழ்வின் நம்பிக்கையையும் நாம் பெற்று அனுபவிக்கும்படியாகவும் இயேசு மரித்தார்.

எசேக்கியேல் 36:26-27, அப்போஸ்தலர் 4:12, ரோமர் 5:9, 1 கொரிந்தியர் 15:57, 2 கொரிந்தியர் 5:18அ கலாத்தியர்1:15-16, எபேசியர் 2:8-9, 1 தீமோத்தேயு 2:5-6

மேலும் இயேசு, இந்த உலகத்தில் அவருடன் உறவு கொண்டிருப்பதன் மூலம் நாம் சமாதானத்தையும், பரிபூரண வாழ்வையும் பெற்றுக் கொள்ளும்படியாகவும் வந்தார். வாழ்க்கையின் பிரச்சனைகளை எப்படி சமாளிப்பது என்பதை அவர் நமக்குக் காண்பிக்க விரும்புகிறார். இயேசு, வாழ்வதற்கான நம்பிக்கையையும், ஒரு புதிய அமைப்பையும் நமக்குக் கொடுக்கிறார். நாம் இயல்பாக கொண்டிருக்கும் வழிகள் நம்மைப் பற்றியே நினைத்து, வேதனையிலேயே இருந்து விடச் செய்கின்றன. அவை நமக்கு உதவுவதில்லை.



யோவான் 10:10, ரோமர் 6:16, ரோமர் 6:21, ரோமர் 8:37, எபேசியர் 2:14, வெளிப்படுத்தின விசேஷம் 3:20




நாம் தேவனிடமிருந்து பிரிந்திருக்கும்போது சமாதானத்துடனிருக்க முடியாது. ஒவ்வொரு நாளும் நாம் செய்யத் தெரிந்து கொள்ளும் காரியங்கள் நம்மை மையமாகக் கொண்டதாக இருந்து, நமக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி, தேவனுடன் ஐக்கியமாக இருப்பதிலிருந்து பிரித்து விடுகின்றன. நாம் நம் பரம தகப்பனுடன் மீண்டும் சமாதானமான உறவுக்குள் வர அதிகமாக ஏங்கினாலும், அந்த ஆவிக்குரிய தொடர்பை ஏற்படுத்த முடியாமல் தவிக்கிறோம். இந்தக் குழப்பமான நிலைக்குக் காரணம், நாமே "சிறப்பாக யோசித்ததும்", நம் நல்லெண்ணங்களுமே.

பிரசங்கி 3:11, ரோமர் 6:16, லூக்கா 1:78-79, யோவான் 16:33, ரோமர் 5:1-2, ரோமர் 8:6

நமக்கும் தேவனுக்கும் இருக்கும் இடைவெளியை நிரப்பி, அவருடனான உறவை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், ஒன்றும் நடப்பதில்லை. இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலம் மட்டுமே நாம் பிதாவாகிய தேவனுடன் தொடர்பு கொள்ள முடியும்.





நீதிமொழிகள் 14:12, ரோமர் 6:23, ரோமர் 3:23



இவரே நம் அனைவருடைய கடந்தகால, நிகழ்கால, மற்றும் எதிர்கால பாவங்களுக்காகவும், தவறுகளுக்காகவும், குணத்திலுள்ள குறைபாடுகளுக்காகவும் மரித்தவர். அவருடைய இரத்தத்தின் மூலமாகவே நாம் சுத்திகரிக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட முடியும். பிதாவாகிய தேவனிடமிருந்து முழுமையான பாவமன்னிப்பையும், நிபந்தனையற்ற அன்பையும் பெற்றுக் கொள்ள முடியும். இயேசு மரித்து உயிருடன் எழுந்ததன் மூலம் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவிலிருந்த இடைவெளியை நிரப்பினார். அதனால்தான் அவர் உலகத்தின் இரட்சகராக இருக்கிறார்.

யோவான் 3:16, 1 பேதுரு 3:18, 1 தீமோத்தேயு 2:5-6, ரோமர் 5:1

இந்தச் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ நமக்கு வாய்ப்பு உண்டு. இந்தச் சம்பவங்களை உண்மை என்று ஏற்றுக் கொண்டு இயேசுவே தேவன் என்று நம்பும்போது, இயேசுவுக்கு இருக்கும் எல்லாவிதமான உரிமைகளுடனும் பாக்கியங்களுடனும் நாமும் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம். நாம் இயேசு கிறிஸ்துவுக்கு உடன் வாரிசுகளாகவும், சகோதரன் அல்லது சகோதரியாகவும் மாறுகிறோம். அதனால், நீங்கள் விருப்பு வெறுப்புகளை விட்டு உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக அவருடைய பராமரிப்பில் விட்டுவிடுங்கள். அது சிக்கலானது அல்ல என்றாலும், நீங்கள் செய்தவற்றிலேயே மிகவும் கடினமான ஒன்றாக இருக்கலாம். நீங்கள் உண்மையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அவருடனான ஐக்கியத்தினால் கிடைக்கும் சந்தோஷத்தையும் அனுபவிக்க விரும்பினால், உங்கள் வாழ்க்கையைப் பொறுப்பெடுத்துக் கொள்ளுமாறு அவரிடம் கேளுங்கள். இதை நீங்கள் உண்மையாகச் செய்வீர்கள் என்றால், ஒரு எளிய ஜெபம் மட்டும் போதும்... ஏனென்றால், தேவன் நம் இருதயத்தைப் பார்க்கிறார். இந்த எளிய ஜெபத்தை ஏறெடுத்து, உங்களை அவரிடம் கொடுத்துவிடுங்கள். **நீங்கள் நம்பி விசுவாசிப்பீர்கள் என்றால், தேவையானதெல்லாம் அது மட்டுமே.**





எபேசியர் 2:13, யோவான் 14:6, எபிரெயர் 4:3, எபிரெயர் 4:7

“பரம தகப்பனே, என்னை உம்மிடம் படைக்கிறேன் - நீர் என்னை மாற்றி, உமக்குச் சித்தமானதை எனக்குச் செய்யும். என் வாழ்க்கையை பொறுப்பெடுத்துக் கொண்டு, நான் உம்முடைய சித்தத்தைச் செய்யும்படி என் சுயநலமான வழிகளிலிருந்து என்னை விடுவியும். உம்முடைய வல்லமையினாலும் அன்பினாலும் நான் யாருக்கெல்லாம் உதவி செய்ய வேண்டுமோ அவர்களுக்கு ஒரு மாதிரியாக இருக்கும்படி, என் பாவங்களின் மீது எனக்கு வெற்றியைத் தாரும். வாழ்விற்கான உமது வழிக்கு என்னை ஒப்புவிக்கிறேன். நான் எப்போதும் உம்மை நம்பி உம்முடைய சித்தத்தையே செய்யட்டும்! கர்த்தராகிய இயேசுவே, நீர் வந்து என் மூலமாக உம் வாழ்வை வாழ்ந்தருளும். ஆமென்.”



இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மீண்டும் உயிருடன் எழுந்தார் என்று உங்கள் வாயினால் அறிக்கையிட்டு, இருதயத்தில் விசுவாசியுங்கள். அவரே மனித உருவில் வந்த தேவன் என்று அவரை நம்பி, தேவனுடைய பிள்ளையாகவும் கிறிஸ்துவுடன் உடன் வாரிசாகவும் மாறிவிடுங்கள்.

யோவான் 11:25-26, யோவான் 14:6-7, ரோமர் 10:9, ரோமர் 10:13, 1 கொரிந்தியர் 6:17, எபேசியர் 1:5-8, எபேசியர் 2:8-10, கொலோசெயர் 2:6-7, 1 யோவான் 5:12-13


தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளும் நீங்கள் முழுமையடைந்து, தேவனுக்காக பிழைத்திருப்பீர்கள்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் வாழ்விற்குள் வருமாறு கேட்டுக் கொள்ளும்போது, ஆதாமிற்குள் இருக்கும் உங்களுடைய பூலோகக் குடும்பத்தின் வம்சத்திலிருந்து கிறிஸ்துவின் நித்திய வாழ்விற்குள் மாற்றப்படுகிறீர்கள். **அந்த வாழ்வு கடந்த காலத்திலும், எதிர்காலத்திலும், என்றென்றைக்கும் இருக்கும் ஒரு வாழ்வு**. சிலுவைக்கு மாற்றப்பட்ட உங்களுடைய பழைய சுபாவம் கிறிஸ்துவுடன் மரிக்கிறது.




ரோமர் 5:18-19, ரோமர் 8:1-2, 1 கொரிந்தியர் 15:22, கலாத்தியர் 5:24, எபேசியர் 1:13-14, எபேசியர் 3:14-15, 1 பேதுரு 1:18-19



நீங்கள் அவருடன் ஒன்றாகி விடுகிறீர்கள். கிறிஸ்துவுடன் ஒன்றிணைக்கப்பட்ட நீங்கள் ஒருபோதும் மாறுவதேயில்லை. இப்போது இயேசு உங்களுக்குள் வசிக்கிறார், நீங்கள் அவருக்குள் வசிக்கிறீர்கள். அவர் போகுமிடமெல்லாம் நீங்களும் போகிறீர்கள். நீங்கள் போகுமிடமெல்லாம் அவரும் வருகிறார்.

யோவான் 14:20, ரோமர் 6:6, கலாத்தியர் 2:20, கலாத்தியர் 4:4-7, கலாத்தியர் 5:24, எபேசியர் 1:11, கொலோசெயர் 2:10

சிலுவையில் உங்களுடைய “பழைய மனுஷன்” இயேசுவுடன் மரித்துவிட்டபோது, நீங்களும் அவருடன் அடக்கம் செய்யப்பட்டீர்கள். உங்களுடைய புதிய ஆவிக்குரிய சுபாவம் கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்து, அவருடனே பரலோகத்திற்கு ஏறிச் செல்கிறது. அப்போது குறைவுகள், குற்ற உணர்வுகள், பாவங்கள் மற்றும் அவமானம் என்னும் பாரங்களை இங்கேயே விட்டுச் செல்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளும், அவர் உங்களுக்குள்ளும் இருக்கிறீர்கள். உங்கள் பழைய வாழ்விற்கு பதிலாக புதிய வாழ்வு ஒன்று கிடைத்துவிடுகிறது. இப்போது உங்களுக்குள் தேவனுடைய ஆவியானவர் வசிக்கிறார், அதனால் உங்களுடைய மனித ஆவி தேவனுடன் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள்; அவர் உங்களுடைய மாபெரும் நித்திய வாழ்விற்கான பயணத்தில் உங்களுடன் இருக்கிறார். **நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள்!**




யோவான் 3:6, யோவான் 11:25-26, ரோமர் 5:5, ரோமர் 6:4-6, ரோமர் 8:10, கொலோசெயர் 2:12-14, கொலோசெயர் 3:1-3, எபேசியர் 1:13ஆ, எபேசியர் 2:6



நீங்கள் உண்மையாக ஜெபம் செய்திருப்பீர்கள் என்றால், இப்போது ஒரு புதிய குடும்பத்தின் அங்கத்தினர் ஆகியிருக்கிறீர்கள் - அது தேவனுடைய குடும்பம். பிதாவாகிய தேவன் நம் அனைவரையும் தம் சொந்தப் பிள்ளைகளாகத் தத்தெடுத்துக் கொள்கிறார். அதனால் நாம் நம் மூத்த சகோதரராகிய இயேசுவின் உடன் வாரிசுகளாக மாறுகிறோம். அவர் உங்களைத் தம் குடும்பத்தில் ஒரு அங்கமாக ஏற்றுக் கொண்டு, எவ்வித நிபந்தனையும் இல்லாமல் நேசிக்கிறார். **நீங்கள் தேவனுடைய பிள்ளை**!

சங்கீதம் 16:11, ரோமர் 5:11, ரோமர் 8:15-17அ, 2 கொரிந்தியர் 5:17, பிலிப்பியர் 3:20அ, எபிரெயர் 2:11-12, வெளிப்படுத்தின விசேஷம் 21:2

கிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்த பாவ பாரங்களுடன் உங்கள் பழைய மனுஷனும் மரித்துப் போனான். இனி பாவங்களாலும், அடிமைத்தனங்களாலும், மனிதனின் மற்ற சுயநலமான வழிகளாலும் நீங்கள் சிறைப்படுத்தப்பட போவதில்லை என்பதால் நிம்மதியாக இருக்கலாம்.



நீங்கள் கிறிஸ்துவுடன் மரித்திருக்கிறீர்கள். சாத்தானின் பயம் என்னும் ஆயுதம் பயனற்றுப் போனபடியினால், மரணத்தைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. இந்தப் புதிய நித்திய வாழ்வுடன் புதியதொரு தைரியமும் துணிச்சலும் நமக்குக் கிடைக்கிறது. இனி மரணம் உங்கள் மீது தாக்கத்தையோ ஆதிக்கத்தையோ செலுத்த முடியாது. வஞ்சித்தல், திருடுதல், பொய் சொல்லுதல் போன்ற ஏராளமான நம் பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். நம்முடைய பாவ சுபாவத்தை விட்டுவிடும்படி நாமும் அவரோடு மரித்திருக்கிறோம். நம் வழிகளிலோ அல்லது தேவனுடைய வழிகளிலோ எல்லாவற்றையும் செய்வதற்கு நமக்குச் சுதந்திரம் உண்டு. நம் சித்தத்தையும் வாழ்க்கையையும் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய பராமரிப்புக்கு ஒப்புவிப்பதற்கு முன்னர் நமக்கு இந்த சுதந்திரம் இல்லை.


ரோமர் 6:11-13, ரோமர் 8:1-2, ரோமர் 8:15-17அ, கலாத்தியர் 5:16, கொலோசெயர்2:6-7, 2 தீமோத்தேயு 1:7, எபிரெயர் 2:14-15



நம் சரீரங்களும் ஆத்துமாக்களும் அடங்கிய நம்முடைய ஆள்தத்துவம் இன்னும் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால், இந்தச் சத்தியத்தை முழுமையாக விளங்கிக் கொள்வது கடினமாக இருக்கலாம். ஆனால், இப்போது கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வசிப்பதால் நாம் ஆவிக்குரிய ஜீவன்களாகிவிட்டோம். நாம் அனுபவிக்க வேண்டும் என தேவன் விரும்பும் பரிபூரண வாழ்வைப் பெற்றிருப்போமானால், இந்தச் சம்பவங்களை விசுவாசத்தால் ஏற்றுக் கொள்ளவேண்டும். உங்கள் சிந்தையை மாற்றி, நீங்கள் யார் என்பதையும் எங்கு நிற்கிறீர்கள் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள். அனுதின உலக வாழ்க்கையின் குப்பையான விஷயங்கள் மீது மனதைச் செலுத்தாமல், உங்கள் பிதா இருக்கும் பரலோகத்தில் உள்ள காரியங்கள் மீது மனதைச் செலுத்துங்கள். அப்போது தேவனுடைய குடும்பத்தில் இருப்பதன் தூய்மையான மகிழ்ச்சியை அனுபவித்து மகிழ்வீர்கள். உங்கள் பழைய மனுஷன் மரித்துப் போனான், இயேசு கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு புது வாழ்வு கிடைத்திருக்கிறது. அது முற்றிலும் புதிதான ஒரு சிந்தனையினால் வருவது. **நீங்கள் மறுரூபமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்**!

ரோமர் 8:5-6, ரோமர் 12:2, 1 கொரிந்தியர் 2:16, எபேசியர் 2:6,
பிலிப்பியர் 2:5, பிலிப்பியர் 3:20அ பிலிப்பியர் 4:6-8,
கொலோசெயர் 3:1-3, 2 தீமோத்தேயு 1:7

நம்முடைய சுதந்திரம் ஒன்று உலகப் பெற்றோர் மற்றும் ஆதாமின் வம்சாவழியில் இருக்க வேண்டும் அல்லது தேவனுடைய குடும்பத்தில் இருக்க வேண்டும். இதைத்தவிர வேறு வழிகள் இல்லை.



இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை என்றால் நாம் ஆதாமில் இருக்கிறவர்களாக காணப்படுவோம். அநேக விசுவாசிகள் ஒரு காலை ஆதாமின் வம்சாவழியிலும் (அல்லது இவ்வுலகக் குடும்பத்தின் வழியிலும்), மற்றொரு காலை தேவனுடைய குடும்பத்திலும் வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அதனால் நமக்குள்ளாக போராட்டங்களும், ஆவிக்குரிய குழப்பங்களுமே நேரிடும். தெளிவாகத் தெரிவு செய்யத் தவறினால், குழப்பத்துடனும் தேவன் நமக்காக வைத்திருக்கிற வெற்றியை அனுபவிக்க முடியாமலும் இருக்க நேரிடும்.

மத்தேயு 7:13-14, ரோமர் 6:16, ரோமர் 7:14-25, ரோமர் 8:1-2,
1 கொரிந்தியர் 15:22, கலாத்தியர் 5:16, பிலிப்பியர் 3:20

தேவன் (பிதா, குமாரன், பரிசுத்த் ஆவி என) மூன்று நபர்களாக இருப்பது போல, நாமும் மூன்று பரிமாணங்களைக் கொண்டிருக்கிறோம். சுற்றுப்புறத்துடன் நம் புலன்கள் மூலம் தொடர்பு கொள்ளும் ஒரு சரீரத்தில் நாம் வாழ்கிறோம். மனம், சித்தம், உணர்வுகளைக் கொண்ட ஆத்துமா என்னும் ஆள்த்தத்துவமும் நமக்குண்டு. இயேசுவின் மீதான நம்பிக்கையினாலும் அவரைப் பற்றிய அறிவினாலும், அவருடன் சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்ததன் மூலம் இப்போது நாம் ஆவியாக இருக்கிறோம். நம் ஆவிக்குரிய பரிமாணமே தேவனுடன் தொடர்பு கொள்ளும் நம் அங்கமாகும்.



ஆதியாகமம் 2:7, மத்தேயு 3:13-17, யோவான் 3:6, ரோமர் 8:10, 1 கொரிந்தியர் 3:16-18, 1தெசலோனிக்கேயர் 5:23-24, எபிரெயர் 4:12

இயேசு கிறிஸ்துவுக்கு நம்மை முற்றிலுமாக, ஒட்டுமொத்தமாக அர்ப்பணிப்பதே இதில் நம்முடைய பங்காக இருக்கிறது. அவர் தம் நோக்கத்தை இந்த உலகத்தில் நிறைவேற்ற தம் வாழ்வை நம்மிலும், நம் மூலமாகவும் வாழ விரும்புகிறார்.



நாமே கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறோம், அவர் நம் ஒவ்வொருவரையும் பயன்படுத்தி மற்றவர்களைச் சந்தித்து குடும்பத்தை விரிவாக்க விரும்புகிறார். தேவனுடைய குடும்பத்திற்கு உங்களை வரவேற்கிறோம். நீங்கள் இப்போது ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறீர்கள்! உங்கள் பழைய மனுஷனுக்கு “குட் பை” சொல்லுங்கள், இயேசு கிறிஸ்து உங்களில் வாழ்வதான உங்கள் புதிய மனுஷனுக்கு “ஹலோ” சொல்லுங்கள்.

ரோமர் 6:11-13, ரோமர் 8:10, ரோமர் 12:1, ரோமர் 12:4-5, 1கொரிந்தியர் 3:16, 1 கொரிந்தியர் 6:19-20, 2 கொரிந்தியர் 5:16-21, எபேசியர் 4:21-24, பிலிப்பியர் 2:5-8, கொலோசெயர் 1:27, 1 யோவான் 3:1-3, 1 யோவான் 3:9-10, 1 யோவான் 5:18-19

தேவனுடைய பிள்ளைகளும், இயேசுவுக்கு உடன் வாரிசுகளுமான நாம் அவருடைய சுதந்திரத்தைப் பகிர்ந்து கொண்டு, பரிபூரண வாழ்வைக் காணத் தொடங்குகிறோம். அவருடைய புதிதான ஆவி உங்களுக்குள் இருப்பதால், நீங்கள் அவரைப் பின்பற்றும்படி தேவனுடைய வழிகளைப் பற்றி மேலும் அதிகமாகத் தெரிந்து கொள்ள விரும்புவீர்கள். தேவன் தம்மை மிக முழுமையாகத் தம் குமாரனாகிய இயேசுவில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகவே, அவரைப் பற்றி எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு வேதாகமத்தை வாங்கி, இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய புதிய ஏற்பாட்டை வாசியுங்கள். யோவான் சுவிசேஷத்தை வாசிக்கத் தொடங்குவது நல்லது. பழைய ஏற்பாட்டின் ஆதியாகமத்தில் உள்ள முதல் பன்னிரண்டு அதிகாரங்கள் எல்லாவற்றின் துவக்கத்தையும் விவரிக்கின்றன. இந்தப் புத்தகத்தின் பக்கங்களின் கீழ்ப்பகுதியில் உள்ள வசனக் குறிப்புகளைப் பார்த்து, உங்களுடைய வேதாகமத்திலோ அல்லது இப்புத்தகத்தின் குறிப்பு பகுதியில் உள்ள வேத வசனங்களையோ வாசித்து, இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள்.



• உங்கள் புதிய தகப்பனிடம் அனுதினமும் ஜெபத்தில் பேசுங்கள். உங்களுடைய புதிய வாழ்விற்காகவும் புதிய குடும்பத்திற்காகவும் அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவர் உங்கள் அருகில் இருப்பதாக நினைத்து, ஒரு நண்பனிடம் பேசுவது போல திறந்த மனதுடன் அந்நியோன்யமாக அவருடன் பேசுங்கள். ஒரு மூத்த சகோதரனாக உங்களை ஒத்த இயேசுவின் உருவில் அவரைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

• வேதாகமத்தை வாசியுங்கள். இப்போது தேவ ஆவியானவர் உங்களுக்குள் இருப்பதால் நீங்கள் ஒரு புதிய ஆவியைப் பெற்றிருக்கிறீர்கள். எனவே, வேதவசனங்களை புதிய விதத்தில் அறிந்து கொள்வீர்கள். வேதாகமத்தின் வசனங்கள் தேவனுடைய வார்த்தையாக இருக்கின்றன. அவற்றின் மூலமாக உங்கள் புதிய தகப்பன் உங்களுடன் பேசுவார். நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு அவர் உங்களை நேசிக்கிறார்.

• மற்றவர்களைச் சந்தித்து, விசுவாசத்தில் வளர்ந்து, அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கும் விதத்தில் ஒரு சபை, குழு அல்லது வேதபாட கூடுகையைக் கண்டுபிடியுங்கள். மற்ற விசுவாசிகள் மூலம் உங்கள் பரம தகப்பன் அடிக்கடி உங்களுடன் பேசுவார்.

• உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணித்தவுடனே நீங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். இது அவரைப் பின்பற்றி, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரோடு நம்மை அடையாளம் காண்பித்துக் கொள்ளும் ஒரு செய்கையாக இருக்கிறது.

• கிறிஸ்தவ விசுவாசத்தைச் சேர்ந்த ஒருவரை உங்களை சீஷராக்க அல்லது உருவாக்கி பயிற்றுவிக்கும் ஆதரவாளராகத் தெரிந்து கொண்டு, அவரிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்வதாகவும், அவரிடம் உங்களைக் குறித்த கணக்கை ஒப்புவிப்பதாகவும் இருக்க வேண்டும்.

• இயேசுவின் மீதான உங்களின் புதிய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் புறப்பட்டுப் போய் மற்றவர்களுக்குச் சொல்லுங்கள்.

• ஒரு வேதாகமத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்று உங்களுக்கு ஆலோசனை கொடுக்கிறோம்.

தேவன் உங்கள் ஆவிக்குரிய பயணத்தை ஆசீர்வதிப்பாராக!

யோசுவா 1:8, மத்தேயு 3:13-17, மத்தேயு 7:7-8, மத்தேயு 10:32,
யோவான் 14:13-14, யோவான் 15:7, பிலிப்பியர் 4:6-7,
எபிரெயர் 4:12, யாக்கோபு 5:15-16, 1 யோவான் 1:9

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

ரோமர் 12:2



இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.

யோவான்14:19ஆ-20




நாம் அவருடனே சிலுவையில் அறையப்பட்டோம், அவருடனே அடக்கம் பண்ணப்பட்டோம், அவருடனே உயிருடன் எழுப்பப்பட்டோம், இப்போது அவருடனே தேவனுடைய பிரசன்னத்தில் உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம்.



கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.

எபேசியர் 2:7



கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்;
ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல,
கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான்
இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ,
என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே
ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும்
விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

கலாத்தியர் 2:20

# நீங்கள் இப்போது தேவனுடைய பிள்ளையாக இருப்பதால்...

தேவனுடைய புதிய பிள்ளையாகிய உங்களுக்கு அவரது மகனாக அல்லது மகளாக இருப்பதனால் கிடைக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. நீங்கள் அவருடன் ஐக்கியம் கொண்டு, அவரை பிதாவே என்று அழைத்து, அவரது மடியில் அமர்ந்து, அவரிடம் உங்கள் இருதயத்தில் இருப்பதை எல்லாம் கொட்டிவிடலாம். அவரை என்றென்றும் நேசிக்கும் அப்பாவாகவும், துணையாகவும், நண்பராகவும், அருள் செய்கிறவராகவும், நம்பிக்கைக்கு உரியவராகவும் கொள்ளலாம். இந்த உரிமைகளுடன் சில பொறுப்புகளும் உங்களுக்கு உண்டு. அவற்றைப் பற்றி இனி காணலாம். நீங்கள் கிறிஸ்துவை பெற்றுக் கொண்டவுடனே போய் இன்னும் ஒருவருக்கு அவரைப் பற்றிச் சொல்லும்படி அறிவுறுத்துகிறோம்.

**மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மத்தேயு 10:32**

இதை எப்படிச் செய்ய வேண்டும் எனச் சரியாக யாரும் கற்றுக் கொடுக்காததுதான் பிரச்சனையாகி விடுகிறது. ஆனால், மிகவும் எளிமையான இதைப் பற்றி **உங்கள் கதையைச் சொல்வது எப்படி** என்ற தலைப்பில் அடுத்த சில பக்கங்களில் காணலாம். இதற்கு அவசியமானது உங்கள் விருப்ப மனப்பான்மையே. நீங்கள் இயேசுவிடம் உங்கள் சித்தத்தையும் வாழ்க்கையையும் அவர் பொறுப்பெடுக்குமாறு உண்மையாக ஜெபித்திருப்பீர்கள் என்றால், இது மிகவும் எளிமையான ஒன்றாகிறது. இப்போது உங்களுக்குள் இருக்கும் அவர் நீங்கள் யோசிக்கிற, தீர்மானிக்கிற, உணர்கிற விதங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். **இந்தக் கருத்து, நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்** (**யோவான்** 9:25) என்பதைப் போன்றது. உங்கள் கதையைச் சொல்லும்போது, கீழ்ப்படிந்து, நீங்கள் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புவதைச் செய்கிறீர்கள். ஒரு புதிய வாழ்வை ஆரம்பிக்கிறீர்கள். அது உங்களால் அல்ல, உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவால் என்பதை நினைவில் கொண்டு, அவர் பேசுவதற்கு விட்டுக்கொடுங்கள்.



## ... பிறருக்குக் கொண்டு செல்லுங்கள்!

மற்றவர்கள் இயேசுவை அறிந்து கொள்ளச் செய்யவும், தேவராஜ்யத்தை விரிவாக்கவும் நமக்கு பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. **(இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார். லூக்கா** 19:10). கிறிஸ்துவின் சரீரமாக இருக்கும் நீங்கள் இதை எப்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி அடுத்த சில பக்கங்களில் காணலாம். இதற்கு அவசியமானது நீங்கள் அதற்காக நேரம் கொடுப்பதே. இயேசு கிறிஸ்து உங்கள் மூலமாகத் தம் வாழ்வை வாழ்ந்து, மற்றவர்களைச் சந்திக்கும்படி அவருக்கு நேரம் கொடுத்து உங்களை நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும். புதிய நபர்களிடம் சென்று பேசுமாறு அவர் உங்களுடன் கேட்கமாட்டார், நீங்கள் ஏற்கனவே அனுதினமும் பார்த்து, அறிந்து, சந்தித்துக் கொண்டிருக்கிறவர்களிடம் இதைப் பற்றிச் சொல்லுமாறு அழைக்கிறார். அப்படிப்பட்டவர்களை அவர் ஏற்கனவே தெரிந்து வைத்திருக்கிறார். இயேசுவை யாரேனும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எப்போது நினைக்கத் தொடங்குகிறீர்களோ அதுமுதல் கிறிஸ்துவின் மனதைக் கொண்டு சிந்திக்கிறீர்கள் என்று அர்த்தம். ஒருவர் இயேசு கிறிஸ்துவை அறிந்து, தேவனுடன் சமாதானம் செய்து கொள்ள உதவுவதற்கு **சாட்சியாயிருப்பது எப்படி** என்ற பகுதி உதவும். அதிலுள்ள ஆலோசனைகள் கடினமானவையல்ல. உங்களுடைய விருப்ப மனப்பான்மையும், இயேசு தம் வாழ்வை உங்களுக்குள் இருந்து வாழ அனுமதிப்பதும் போதுமானது.



**நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். 1 தீமோத்தேயு 2:1**




நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்!
யோவான் 9:25

# உங்கள் கதையைச் சொல்வது எப்படி

**கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த சாட்சியின் மூலம் சாட்சியாயிருக்கிறார்கள்**
இயேசு கிறிஸ்துவை அறிந்து அவர் மீது நம்பிக்கை வைத்ததைப் பற்றிய உங்கள் சொந்த சாட்சியை பகிர்ந்து கொள்வதே தனித்தாள் சுவிசேஷமறிவித்தலின் முதல் படி. சொந்த சாட்சியில் இரு வகைகள் உண்டு. ஒன்று சரித்திரத்தைச் சொல்வது, இயேசு கிறிஸ்துவை உங்கள் கர்த்தராகவும் இரட்சகராகவும், உங்கள் ஆத்துமாவின் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு நம்பத் தொடங்கியதற்கு முந்தைய உங்கள் வாழ்க்கையையும், நம்பத் தொடங்கியபோது இருந்த மாற்றம் அதற்கு பின்பான உங்கள் வாழ்க்கையையும் சொல்வது. மற்றொன்று, கருப்பொருள் வகை சாட்சி. அதில், உங்கள் இரட்சிப்பின் சம்பவத்தையும், அதுமுதல் உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றியும் பகிர்ந்து கொள்ளலாம். இது, ஒரு குழந்தையாக கிறிஸ்துவுக்குள் வந்து, மாற்றம் அடைந்தது முதலான அவரது வாழ்க்கையைப் பற்றிய சாட்சியாக இருக்கலாம். மற்றொரு உதாரணம்: தன் வாழ்நாள் முழுவதும் தான் ஒரு கிறிஸ்தவனாக இருந்ததாக நினைத்துக் கொண்டிருந்து, பின்பு தேவனை அறியாமலிருந்ததை அறிந்து, மனந்திரும்பி ஒப்புகொடுத்த ஒருவர். நீங்கள் பகிர்ந்து கொள்பவருக்கும் உங்களுக்கும் பொதுவான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் இருந்து உங்கள் சாட்சியைத் தொடங்குங்கள். **அது ஒரே சொந்த ஊர், ஒரே வேலை, ஒரே பள்ளி, போல ஏதாவது ஒன்றாக இருக்கலாம். இருவரும் ஆர்வம் கொண்டிருக்கும் ஏதேனும் ஒரு விஷயத்தைக் கண்டுபிடியுங்கள்.**

## முந்தின வாழ்க்கை எப்படி இருந்தது

உங்கள் கதையைச் சொல்லும்போது, உங்கள் வாழ்க்கையில் நீங்களே யோசித்து வாழ்ந்து வந்த விதத்தை மாற்றும்படி உங்களை நடத்திச் சென்ற பாதையை நினைத்துப் பார்த்து, அதை சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். நாம் எல்லோருமே வாழ்வில் மோசமானத் தீர்மானங்களையும் தவறான தெரிவுகளையும் செய்திருக்கிறோம். அவற்றைச் செய்யாமல் இருந்திருக்கலாமே என்றும் மீண்டும் அவற்றைச் செய்யக் கூடாது என்றும் நினைத்திருப்போம். அவற்றைத் திருத்தி அதே நாட்களுக்குச் சென்று வாழ வாய்ப்புக் கிடைத்தால் எப்படியிருக்கும் என்றும் ஏங்குகிறோம். சில நேரங்களில் தொடர்ந்து நடக்கும் சம்பவங்களோ அல்லது ஒரு பெரிய தவறோ அல்லது ஒரு எதிர்பாராத நிகழ்வோ நம்மை பின்னிட்டு மீண்டும் யோசித்துப் பார்க்கச் செய்கின்றன. சூழ்நிலை எதுவாக இருந்தாலும், நம் செயல்கள் அல்லது நடத்தையின் விளைவுகள் நம்மை நாம் உணர்ந்து, நம்மால் முடியாது என்னும் நிலைக்குத் தள்ளும் கிரியா ஊக்கிகளாகி விடுகின்றன. அதுதான் நீங்கள் முன்பு நடந்த விதத்தில் இனி நடக்க முடியாது என்றும், மாறாவிட்டால் கடுமையான விலைக்கிரயம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அறியும் நேரம். இப்படிப்பட்ட விளைவுகளை நீங்கள் ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருக்கலாம். நம்மில் அநேகர் வாழ்க்கைப் பயணத்தில் இனி நம்மை நாமே நம்பிக் கொண்டிருக்க முடியாது என்னும் நிலைக்கு ஆளாகிறோம். நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை. உண்மையான தேவன் யார் என்று கண்டறிந்து, நாம் நடந்து கொள்ளும் விதத்தை மாற்ற வேண்டும்.



## நடந்தது என்ன

நம்மை நாமே தாழ்த்தி, நாம் இந்த உலகத்தின் எஜமான்கள் அல்ல என்று அறியும்போது, நமக்கு முன்பாகத் தெரிவு செய்யும்படி இருக்கும் வாய்ப்புகளைக் காணத் தொடங்குகிறோம். அப்போது புதிதும் அற்புதமான ஒரு விதத்தில் நமக்கு அறிவிப்பவர் ஒருவர் வருகிறார்; அவர் சிறப்பான மற்றும் நித்தியமான வாழ்வைப் பற்றியும், தேவனுடன் சமாதானமாக இருப்பதைப் பற்றியும் நமக்குச் சொல்கிறார். அவர் ஒரு நண்பராகவோ, ஒரு உறவினராகவோ, ஒரு குழந்தையாகவோ, ஒரு சகோதரனாகவோ அல்லது சகோதரியாகவோ வரலாம். அவர் வந்து, ஒரு சபைக்கோ அல்லது வேதபாட வகுப்பிற்கோ வருமாறு உங்களை அழைப்பார்.



அவர் உங்களிடம் (தன் சொந்த சாட்சியைச்) சொல்லி, முதலாவது இயேசுவைத் தேடி, உங்கள் சக்தியினால் காரியங்களைச் செய்ய முடியாததை ஒப்புக் கொள்வதில் உங்களுக்குள்ள பிரச்சனைகளுக்காக சிறப்பான ஒரு ஆவிக்குரிய அணுகுமுறையை முயற்சி செய்து பார்க்குமாறு ஆலோசனை



கொடுக்கலாம். நீங்கள் தேவனைத் தேடி, ஒரு புதிய வாழ்க்கைமுறையை ஏற்றுக் கொண்டு அதற்கு உங்களை அர்ப்பணிக்கத் தயாராகும்போது ஏதோ ஒன்று உங்களை ஈர்க்கிறது. அதனால் நீங்கள் தேவனுடையபிள்ளையாக மாற சகல விதத்திலும் முயற்சி செய்கிறீர்கள். அது நடந்தும் விடுகிறது. நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்பி, உங்கள் சித்தத்தையும் வாழ்க்கையையும் அவர் பொறுப்பெடுக்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். புதிய வாழ்வு தொடங்கிவிட்டது.

## இப்போது எப்படி இருக்கிறது

தேவனுடைய பிள்ளையாக மாறிய நீங்கள் மறுபடியும் பிறந்த விசுவாசியாகி இருக்கிறீர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், தேவனாகவும், இரட்சகராகவும், வாழ்வாகவும் ஏற்றுக் கொண்டு, அவரை நேசித்து, நம்பத் தொடங்கியிருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கை மாறியிருக்கிறது; ஒரு புதிய மனப்பான்மையுடனும், புதிய பண்புகளுடனும் உங்கள் பயணத்தைச் சரியாகத் தொடங்கியிருக்கிறீர்கள். இப்போது நீங்கள் உங்கள் பரம தகப்பனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாகி இருக்கிறீர்கள். இந்தப் பகுதியில், உங்கள் வாழ்வும், உங்கள் சிந்தனையும், உங்கள் ஆள்தத்துவமும் கூட மாறியிருக்கும் விதத்தை யோசித்துப் பாருங்கள். வாழ்வின் சிரமங்களை சமாளிக்க தேவ கிருபை உங்களை எப்படி பயிற்றுவிக்கிறது என்றும், தேவ ஆவியானவர் சரியானவைகளைச் செய்யும்படி உங்களை எப்படி ஏவுகிறார் என்றும், தவறான வழியில் செல்லும்போது எப்படித் திருத்துகிறார் என்றும் விளக்குங்கள். இந்தப் பகுதியில், நன்மைகளையும், தீமைகளையும் நீங்கள் விவரிக்கலாம். எல்லாம் எப்போதுமே நன்மையாக இருக்காது என்பதை நாமறிவோம். உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்து ஒரு கிரியையைச் செய்து கொண்டிருக்கிறார், நீங்களே அந்தக் கிரியையாக இருக்கிறீர்கள் என்பதே முக்கியம்.




# அடுத்தது என்ன



இதுமுதல் நாம் கிறிஸ்துவுக்குள் வளர்கிறோம். சிலசமயங்களில் அந்தப் பாதை மேடுபள்ளமாகவும், குழிகளாகவும் இருக்கலாம், ஆனால் நாம் சந்திக்கும் பிரச்சனைகளையும் தடைகளையும் சமாளிக்க இப்போது நம்மிடம் புதிய கருவிகள் உண்டு. நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியின் மூலம், நமக்கு வழிகாட்டி, பழைய வாழ்க்கையின் தவறானத் தெரிவுகளை இனி செய்யாதிருக்கும்படிக் காக்கும் தேவ வல்லமை நம்மிடம் உண்டு. நாம் வேதாகமத்தை வாசித்து, கிறிஸ்துவின் வழிகளையும் நடத்தைகளையும் அறிந்து, அவரைப் பின்பற்ற கற்றுக் கொள்கிறோம். கிறிஸ்து மரித்தபோது அவரோடு கூட நம் பழைய மனுஷனும் மரித்துவிட்டதையும், இப்போது நாம் புதிய படைப்புகளாக இருப்பதையும் உணர்ந்து அறிகிறோம். இயேசு கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார் என்பதை அறிந்து உணர்ந்து, இரட்சிக்கப்பட்டு அவருடைய சாயலைப் போல மறுரூபமாக்கப்படும் நாம் அந்த அடிப்படைச் சத்தியத்தை நமக்கு உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவனாக முதிர்ந்து வரும் நீங்கள் உயிர்த்தெழுந்த இரட்சகரை அப்படியே பினபற்றுகிறீர்கள். உயிருள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்து தம் வாழ்வை உங்களுக்குள்ளும் உங்கள் மூலமாகவும் வாழ்ந்து, தம்முடையவர்களான தேவ பிள்ளைகளைப் பற்றிய தம் விருப்பங்களை நிறைவேற்றுகிறார். **நீங்கள் கடந்த காலத்தை அப்படியே விட்டுவிட்டு, கிறிஸ்துவை பின்பற்றி அதிகதிகமாக அவரைப் போல மாறுகிறீர்கள்.**








சங்கீதம் 40:3, யோவான் 9:25, யோவான் 12:17, கொலோசெயர் 4:5-6, 1 தெசலோனிக்கேயர் 1:6-8, 1 பேதுரு 3:15, வெளிப்படுத்தின விசேஷம் 12:11, வெளிப்படுத்தின விசேஷம் 19:10



## சாட்சியாயிருப்பது எப்படி

**அவிசுவாசி ஒருவருக்கு இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துவதற்கான ஆலோசனைகள்.** பின்வரும் பத்து ஆலோசனைகள் சிலுவையின் செய்தியைச் சொல்வதற்கான பயனுள்ள வழியாக இருக்கின்றன. இந்த ஆலோசனைகளை கவனமாகப் பின்பற்றும்போது, நீங்கள் வெற்றியடையலாம். நீங்கள் பயனுள்ள விதத்தில் விதை விதைப்பவராகவும், ஆத்துமஆதாயம் செய்பவராகவும் மாறிவிடுவீர்கள். எப்படியும் நீங்கள் தேவராஜ்யத்தை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பீர்கள், அதுவே உங்கள் வாழ்வின் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

- **பத்து நபர்களை யோசித்துக் கொள்ளுங்கள்.** இவர்கள் நண்பர்களாகவோ, உறவினர்களாகவோ, அன்பானவர்களாகவோ, உங்கள் தொழில் அல்லது அனுதின வாழ்வில் கடைக்குப் போகும்போதும், விளையாடும்போதும், வேலை செய்யும்போதும் சந்திக்கும் நபர்களாகவோ இருக்கலாம்.
- **அவர்களின் பெயர்களை எழுதிக் கொள்ளுங்கள்.** அந்தப் பத்து விசேஷித்த பெயர்களை எழுதி வைத்த பின்னர், அந்தத் தாளை உங்களுக்கு அனுதினமும் நினைப்பூட்டக் கூடிய ஒரு இடத்தில் ஒட்டி வையுங்கள்.
- **அவர்கள் ஒவ்வொருவரின் இரட்சிப்புக்காகவும் ஜெபிக்கத் தொடங்குங்கள்.** அப்படி ஜெபிக்கும்போது, இயேசுவையும் அவரது நித்திய வாழ்வையும் பற்றிக் கேட்பதற்கு தேவன் அவர்களது மனதையும் இதயத்தையும் திறக்கும்படி அவரிடம் கேளுங்கள். நாம் கெட்டவர்களை நல்லவர்களாக மாற்றும் முயற்சியில் இல்லை என்பதையும், நீங்கள் பெற்றுக் கொண்ட நித்திய வாழ்வு என்னும் பரிசை அவர்களுக்குக் கொடுத்து ஆவியில் மரித்திருக்கிற அவர்களை உயிர்ப்பிக்கவே நாடுகிறோம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

• **இருபத்தொரு நாட்களுக்கு அவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள்.** இந்த விசேஷமான ஆத்துமாக்களுக்காக நீங்கள் எவ்வளவு நேரமெடுத்து ஜெபிக்கிறீர்கள் என்பதை தேவன் பார்ப்பதில்லை என்றாலும், ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள இருபத்தொரு நாட்களாகின்றன என்பதை நாமறிவோம். ஆகவே, இவர்களுக்காக நீங்கள் நிச்சயமாக இத்தனை நாட்கள் ஜெபிப்பது அவசியம். அப்போது உங்களுக்கும் இரட்சிக்கப்படாதவர்களுக்காக ஜெபிக்கும் பழக்கம் ஏற்படும்.



• **ஒவ்வொருவராக தொடர்பு கொள்ளத் தொடங்குங்கள்.** அந்த இருபத்தொரு நாட்களுக்குப் பின்னர், ஜெபத்தில் நீங்கள் எல்லாவற்றையும் கேட்டு முடித்திருப்பீர்கள், இது செயல்படுவதற்கான தருணம். முதல் நபரை அழைத்து, அவரிடம் நீங்கள் ஒன்றைக் காண்பிக்க வேண்டும் என்றும், அது அவருக்கு ஏற்றதா என்பதைப் பார்க்கும்படியும் சொல்லுங்கள். ஒரு சிற்றுண்டிக்கோ அல்லது மதிய உணவிற்கோ உங்கள் நண்பரை அழையுங்கள். அவர் ஒப்புக் கொள்ளும் வரை தொடர்ந்து அழைத்துக் கொண்டேயிருங்கள்.

• **தேவனுடைய பிள்ளையாக இருப்பது எப்படி என்ற புத்தகத்தை அவரிடம் காண்பியுங்கள்.** இந்தச் சிறு புத்தகத்தை நீங்கள் வாசித்தபோது அது உங்களுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும், அது அவர்களுக்கும் ஏற்றதாக இருக்குமா என்று பார்க்க விரும்புவதாகவும் சொல்லுங்கள். உங்களிடம் ஒரு கம்ப்யூட்டர் அல்லது ஐபேட் அல்லது ஏதேனும் மொபைல் கருவி இருக்குமானால், www.howtobeachildofgod.com என்ற இணையதளத்திற்குச் சென்று, மின் புத்தகத்தை வாசியுங்கள் அல்லது உங்களிடம் புத்தகம் இல்லையென்றால் இதற்கான காணொளியை பாருங்கள்.

• **புத்தகம் முழுவதையும் ஒவ்வொரு பக்கமாக வாசியுங்கள்.** 14 ஆம் பக்கத்தில் உள்ள ஜெபத்தை வாசித்து, பின்னர் முழு புத்தகத்தையும் படியுங்கள். புத்தகத்தின் பின்புறத்தில் இருக்கும் வேதவசனங்களை உங்கள் நண்பரிடம் காண்பித்து, அவை வேதாகமம் இல்லாத பட்சத்தில் சுலபமாக வேதவசனங்களை அறிந்துகொள்ள உதவும் என்று சொல்லுங்கள். புத்தகத்தில் உள்ளவற்றை எப்படி அந்த வசனங்கள் விளக்குகின்றன என்றும் காண்பியுங்கள்.

• **உங்கள் கதையைச் சொல்லுங்கள்.** அந்தச் சமயத்தில் நீங்கள் எப்படி இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டீர்கள் என்று உங்கள் கதையைச் சொல்லத் தொடங்குங்கள். ஒரு சாட்சி பின்வருவனவற்றை விளக்குவதாக இருக்க வேண்டும்: **முன்பு எப்படி இருந்தது, என்ன நடந்தது, இப்போது எப்படி இருக்கிறது.** உங்கள் சாட்சி மற்றவர்கள் தொடர்புபடுத்தி பார்க்கக்கூடியதாக இல்லாவிட்டால், தனியாக இந்தப் புத்தகத்தை வாசித்து, 14 ஆம் பக்கத்தில் உள்ள ஜெபத்தை உரக்கச் செய்து, நீங்கள் ஜெபத்தில் சொன்னதை உங்கள் இருதயத்தில் விசுவாசியுங்கள்.பின்னர், நீங்கள் தொடர்ந்து உரையாடலாம். இந்தப் பக்கங்களுக்கு முன்பாக உள்ள **உங்கள் கதையைச் சொல்வது எப்படி: கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த சாட்சியின் மூலம் சாட்சியாயிருக்கிறார்கள்** என்னும் பகுதியைப் பார்க்கவும்.



கிறிஸ்து உங்களுக்குள்
கொலோசெயர் 1:27

• **முக்கியமான ஒரு கேள்வியைக் கேளுங்கள்.** நீங்கள் சொன்ன விஷயம் உங்கள் நண்பருக்கு புரிகிறதா என்று அவரிடம் கேளுங்கள். அவர் மரித்தால் பரலோகம் போவாரா என்று கேளுங்கள். அவர் நினைத்துக் கொண்டிருப்பதுதான் நித்திய வாழ்வின் அர்த்தமா என்று கேளுங்கள். கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஆவிக்குரிய உரையாடலுக்குள் அவரை வரவழையுங்கள். உங்களுக்கு விருப்பமிருந்து நீங்கள் விட்டுக் கொடுத்தால் போதும், பேசுவதற்கான வார்த்தைகளை தேவன் உங்களுக்குக் கொடுப்பார்.

• **உங்கள் நண்பர் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ளும்படி நடத்துங்கள்.** அவர் நல்ல முறையில் ("உங்களிடம் இருப்பது எனக்கும் வேண்டும். கிறிஸ்தவராவது எப்படி? நான் இன்னும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்") பதில் கொடுத்தால், தேவனுடைய பிள்ளையாக இருப்பது எப்படி என்னும் புத்தகத்தின் 14 ஆம் பக்கத்தில் உள்ள ஜெபத்தின் மூலம் அவரை கிறிஸ்துவிடம் நடத்துங்கள். உங்கள் நண்பரும் உரக்கவோ அல்லது நீங்கள் சொல்லச் சொல்ல உங்களைப் பின்பற்றியோ அந்த ஜெபத்தைச் சொல்லட்டும். அவருடன் சேர்ந்து ஜெபித்த பின்னர் 20-15 பக்கங்களில் உள்ள விஷயங்களையும் படங்களையும் பார்த்து, சிலுவையைப் பற்றிய அனைத்தையும் அவர் அறிந்து கொண்டாரா என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள். முடித்த பின்னர் மகிமையில் அவருக்கு ஒரு புதிய பெயர் எழுதி வைக்கப்படும், உங்கள் நண்பர் தேவனுடைய பிள்ளையாகி விடுவார்!

## அறுவடை செய்தல்

இந்த எளிய ஆலோசனைகளை பின்பற்றும்போது நீங்கள் ஆத்தும ஆதாயம் செய்பவராக மாறிவிடலாம். இதற்கு எந்தக் கேள்வியும், நிபந்தனையும் இல்லை. நீங்கள் ஏற்கனவே அறிந்த நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தேவன் உங்களை ஒரு தனிப்பட்ட ஆள்த்தத்துவத்துடன் படைத்திருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவர்களுக்காக ஜெபித்து அவர்களை அணுகுவதுதான். **மற்றவற்றை அவர் செய்துவிடுவார்**! நீங்கள் பட்டியலில் வைத்திருக்கும் நபர்களே தேவன் தெரிந்து கொண்ட நபர்களாக இருக்கவும் வாய்ப்புண்டு. அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய ஒருவர் மட்டும் தேவை, அது நீங்கள்தான்! **நீங்கள் உங்கள் நண்பரிடம் பேசும்போது தேவன் உங்கள் மூலமாக பேசுவார். இவையனைத்தும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருக்கின்றன என்பதையும், நீங்கள் வருவதற்காக தேவன் காத்திருந்தார் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.** உங்கள் நேரத்தை பிதாவுக்குக் கொடுப்பதே அவருக்குத் தேவை. அந்த நபர் கிறிஸ்துவிடம் வர அது ஏற்ற நேரமாக இல்லாமல் போகலாம் என்பதே ஒரே நிபந்தனை.



அப்படி இருக்குமானால், அந்த நாளில் நீங்கள் ஆத்தும ஆதாயம் செய்பவராக இல்லாமல் போகலாம், ஆனால் விதை விதைப்பவராக இருப்பீர்கள். எப்படியானாலும், நீங்கள் உங்களுடைய பரம பிதாவுக்கு கீழ்ப்படிகிறவர்களாகிவிடுவீர்கள். அதைத்தான் உண்மையில் அவரும் கேட்கிறார். நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்கள் என்றால், இந்த வேலையைச் செய்வது நீங்களல்ல, கிறிஸ்துவே.

மத்தேயு 4:19-20, மத்தேயு 10:32, லூக்கா 9:60, லூக்கா 10:2, லூக்கா 19:10, யோவான் 15:16, அப்போஸ்தலர் 1:8, அப்போஸ்தலர் 9:28, 1 தீமோத்தேயு 2:3-4

# வேதவசனங்கள் அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். பக்கம் 40

அப்போஸ்தலர் 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான். பக்கம் 8

அப்போஸ்தலர் 9:28 அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து; கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து. பக்கம் 40

ஆதியாகமம் 2:16-17 தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். பக்கம் 6

ஆதியாகமம் 2:7 தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். பக்கம் 24

ஆதியாகமம் 2:8-9 தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். பக்கம் 6

ஆதியாகமம் 3:2-6 ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக்குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். பக்கம் 6

ஆதியாகமம் 3:23 அவன் எடுக்கப்பட்ட மண்ணைப்பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். பக்கம் 6

எசேக்கியேல் 36:26-27உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன். பக்கம் 8

எபிரெயர் 1:3 இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார். பக்கங்கள் 1 & 2 & 5

எபிரெயர் 2:14-15 ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். பக்கம் 4

எபிரெயர் 4:12 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. பக்கங்கள் 24 & 26

எபிரெயர் 4:3 விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத்தோற்றமுதல் முடிந்திருந்தும்: இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார். பக்கம் 13

எபிரெயர் 4:7 இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று வெகுகாலத்திற்குப்பின்பு தாவீதின் சங்கீதத்திலே சொல்லியிருக்கிறபடி, இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். பக்கம்13

எபிரெயர் 9:22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. பக்கம் 4

எபேசியர் 1:11,12 மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். பக்கம் 18

எபேசியர் 1:13-14 நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். பக்கங்கள் 17 & 19

எபேசியர் 1:5-8 பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார். பக்கங்கள் 15 & 16

எபேசியர் 1:7 அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. பக்கம் 4

எபேசியர் 2:13 முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். பக்கம் 13

எபேசியர் 2:14 எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, பக்கம் 9

எபேசியர் 2:6 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். பக்கம் 19

எபேசியர் 2:8-10 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். பக்கங்கள் 8 & 15 & 16

எபேசியர் 3:14-15 இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, பக்கம் 17

எபேசியர் 4:21-22 இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, பக்கம் 25

கலாத்தியர் 1:15-16 அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன், தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்; பக்கம் 8

கலாத்தியர் 2:20 கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். பக்கம் 18

கலாத்தியர் 4:4-7 நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக. காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய். பக்கம் 18

கலாத்தியர் 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். பக்கம் 23

கலாத்தியர் 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். பக்கங்கள் 17 & 18

1 கொரிந்தியர் 15:22 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். பக்கங்கள் 17 & 23

1 கொரிந்தியர் 15:45-46 அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. பக்கம் 6

1 கொரிந்தியர் 15:57 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். பக்கம் 8

1 கொரிந்தியர் 2:16 கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. பக்கம் 22

1 கொரிந்தியர் 3:16-18 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத்

தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். பக்கங்கள் 25 & 26

1 கொரிந்தியர் 6:17 அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். பக்கங்கள் 15 & 16 & 24

1 கொரிந்தியர் 6:19-20 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். பக்கம் 25

2 கொரிந்தியர் 5:16-21 ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். பக்கம் 25

2 கொரிந்தியர் 5:17 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. பக்கம் 20

2 கொரிந்தியர் 5:18 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் பக்கம் 8

கொலோசெயர் 1:15 அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர். பக்கங்கள் 1 & 2

கொலோசெயர் 1:27ஆ புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். பக்கம் 25

கொலோசெயர் 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலையிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். பக்கம் 18

கொலோசெயர் 2:12-14 ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமை யினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து. பக்கம் 19

கொலோசெயர் 2:6-7 ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. பக்கங்கள் 15 & 16

கொலோசெயர் 2:9 ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. பக்கங்கள் 1 & 2

கொலோசெயர் 3:1-3 நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. பக்கம் 19

கொலோசெயர் 4:5-6 புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக. பக்கம் 36

சங்கீதம் 16:11 ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. பக்கம் 20

சங்கீதம் 40:3 நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்; அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள். பக்கம் 36

1 தீமோத்தேயு 2:3-4 நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். பக்கம் 40

1 தீமோத்தேயு 2:5-6 தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. பக்கங்கள் 8 & 12

2 தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். பக்கம் 21

1 தெசலோனிக்கேயர் 1:6-8 நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று. பக்கம் 36

1 தெசலோனிக்கேயர் 5:23-24 சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். பக்கங்கள் 24 & 25

நீதிமொழிகள் 14:12 மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள். பக்கம் 11

பிரசங்கி 3:11 அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். பக்கம் 10

பிலிப்பியர் 2:5-8 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். பக்கங்கள் 1 & 2 & 22 & 25

பிலிப்பியர் 3:20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். பக்கங்கள் 20 & 22 & 23

பிலிப்பியர் 4:6-7 நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். பக்கம் 26

1 பேதுரு 1:18-19 உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. பக்கம் 25

1 பேதுரு 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். பக்கம் 4

1 பேதுரு 3:15 கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். பக்கம் 36

1 பேதுரு 3:18 ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். பக்கம் 12

மத்தேயு 10:32 மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். பக்கம் 40

மத்தேயு 1:20b-23 அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். பக்கம் 1

மத்தேயு 26:28-29 இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடுகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பக்கம் 4

மத்தேயு 27:57-61 சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான். அங்கே மகதலேனா

மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள். பக்கம் 4

மத்தேயு 3:13-17 அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. பக்கங்கள் 3 & 26

மத்தேயு 4:19-20 என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். பக்கம் 40

மத்தேயு 7:13-14 இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். பக்கம் 26

மத்தேயு 7:28-29 இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். பக்கம் 3

மத்தேயு 7:7-8 கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். பக்கம் 26

மாற்கு 6:2-3 ஓய்வுநாளானபோது, ஜெபஆலயத்தில் உபதேசம் பண்ணத் தொடங்கினார். அநேகர் கேட்டு, ஆச்சரியப்பட்டு, இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது? இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்கு சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். பக்கம் 5

1 யோவான் 1:7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். பக்கம் 4

1 யோவான் 1:9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். பக்கம் 26

1 யோவான் 3:1-3 நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். பக்கம் 25

1 யோவான் 3:9-10 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. பக்கம் 25

1 யோவான் 5:12-13 குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். பக்கங்கள் 15 & 16

1 யோவான் 5:18-19 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத்தொடான். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம். பக்கம் 17

யாக்கோபு 5:16 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. பக்கம் 26

யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். பக்கம் 26

யோவான் 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். பக்கம் 9

யோவான் 10:30 நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். பக்கங்கள் 1 & 2

யோவான் 11:25-26 இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார். பக்கங்கள் 15 & 16 & 19

யோவான் 12:17 அன்றியும் அவருடனேகூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள். பக்கம் 36

யோவான் 14:13-14 நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்.பக்கம் 26

யோவான் 14:20 நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். பக்கங்கள் 18 & 19

யோவான் 14:6-7 அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். பக்கங்கள் 13 & 15 & 16

யோவான் 15:16 நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுகொள்ளுவது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். பக்கம் 40

யோவான் 15:7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். பக்கம் 26

யோவான் 16:28 நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். பக்கம் 5

யோவான் 16:33 என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். பக்கம் 10

யோவான் 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. பக்கங்கள் 1 & 2

யோவான் 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். பக்கம் 12

யோவான் 3:6 மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். பக்கங்கள் 19 & 24

யோவான் 9:25 அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான். பக்கம் 36

ரெயர் 2:11-17 எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப்பாடுவேன் என்றும்; நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்.அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரி யங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது பக்கங்கள் 1 & 2 & 20

ரோமர் 10:13 ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். பக்கங்கள் 15 & 16

ரோமர் 10:9 என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். பக்கங்கள் 15 & 16

ரோமர் 12:1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ளஆராதனை. பக்கம் 25

ரோமர் 12:4-5 ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். பக்கம் 25

ரோமர் 3:23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, பக்கங்கள் 7 & 11

ரோமர் 5:1-2 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம் பக்கங்கள் 10 & 12

ரோமர் 5:11 அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம். பக்கம் 20

ரோமர் 5:12 இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. பக்கம் 7

ரோமர் 5:18-19 ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். பக்கங்கள் 7 & 17

ரோமர் 5:5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. பக்கம் 19

ரோமர் 5:6 அன்றியும், நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். பக்கம் 4

ரோமர் 5:9 இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. பக்கம் 8

ரோமர் 6:11-13 அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். பக்கம் 25

ரோமர் 6:16 மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? பக்கங்கள் 9 & 23

ரோமர் 6:21 இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. பக்கம் 9

ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். பக்கம் 11

ரோமர் 6:4-6 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். பக்கங்கள் 18 & 19

ரோமர் 7:14-25 மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன். எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன். பக்கம் 23

ரோமர் 8:1-2 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. பக்கங்கள் 17 & 23

ரோமர் 8:10 மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். பக்கங்கள் 19 & 24 & 25

ரோமர் 8:15-17ஆ அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய

பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. பக்கங்கள் 20 & 21

ரோமர் 8:37 இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. பக்கம் 9

ரோமர் 8:3 அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். பக்கங்கள் 1 & 2 & 4

ரோமர் 8:5-6 அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். பக்கங்கள் 17 & 23

லூக்கா 10:2 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். பக்கம் 40

லூக்கா 19:10 இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். பக்கம் 40

லூக்கா 1:78-79 அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். பக்கம் 10

லூக்கா 24:1-7 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல்புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு, உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல், அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டு தலைகவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள். பக்கம் 5

லூக்கா 24:50-51 பின்பு அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி. அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசிர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். பக்கம் 5

லூக்கா 2:40 பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. பக்கம் 3

லூக்கா 2:41-47 அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள். அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது, அவர்கள் அந்தப் பண்டிகைமுறைமையின்படி எருசலேமுக்குப்போய், பண்டிகைநாட்கள் முடிந்து, திரும்பிவருகிறபோது, பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது. அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒருநாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள். காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். மூன்றுநாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன... பக்கம் 3

லூக்கா 2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். பக்கம் 3

லூக்கா 9:60 அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார். பக்கம் 40

வெளிப்படுத்தல் 12:11 மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். பக்கம் 36

வெளிப்படுத்தல் 19:10 அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான். பக்கம் 36

வெளிப்படுத்தல் 21:2 யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. பக்கம் 20

வெளிப்படுத்தல் 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். பக்கம் 9


**அமேசான் அல்லது கிறிஸ்தவ புத்தக நிலையங்களில் கூடுதலாகக் கிடைக்கும் மற்ற புத்தகங்கள்**

- த ரெஸ்ட் ஆ்ப் த காஸ்பெல், டான் ஸ்டோன் அண்ட் டேவிட் கிரெகரி
- கிளாசிக் கிறிஸ்டியானிடி, பாப் ஜார்ஜ்
- ஹேன்ட்புக் டு ஹேப்பிநெஸ், சார்ல்ஸ் சாலமன்
- இன்ஸ் அன்ட் அவுட் ஆ்ப் ரிஜக்ஷன், சார்ல்ஸ் சாலமன்
- லை்ப்டைம் கேரண்டி, பில்லி கில்ஹாம்
- த நார்மல் கிறிஸ்டியன் லை்ப், வாட்ச்மன் நீ
- சிட் வாக் ஸ்டாண்ட், வாட்ச்மன் நீ
- ரிலீஸ் ஆ்ப் த ஸ்பிரிட், வாட்ச்மன் நீ
- பர்த்ரைட், டேவிட் நீட்ஹாம்
- த ட்ரூ வைன், ஆண்ட்ரூ முர்ரே
- அபைட் இன் க்ரைஸ்ட், ஆண்ட்ரூ முர்ரே
- அப்சல்யூட் சரண்டர், ஆண்ட்ரூ முர்ரே
- விக்டரி இன் க்ரைஸ்ட், சார்ல்ஸ் ட்ரம்புள்
- த கீ டு ட்ரையம்்பண்ட் லிவிங், ஜாக் டெய்லர்
- த சேவிங் லை்ப் ஆ்ப் க்ரைஸ்ட், W. இயான் தாமஸ்
- த கி்ப்ட் ஆ்ப் ்பர்கிவ்னஸ், சார்ல்ஸ் ஸ்டான்லி
- த ப்ளஸ்ஸிங் ஆ்ப் ப்ரோக்கன்னஸ், சார்ல்ஸ் ஸ்டான்லி
- அட்வர்சிடி, சார்ல்ஸ் ஸ்டான்லி
- ட்ரூ்பேஸ்ட், ஜான் ஸ்டான்லி
- மை அட்மோஸ்ட் ்பார் ஹிஸ் ஹையஸ்ட் (தியானம்), ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்
- ்பர்கிவன் ்பார்எவர், பாப் ஜார்ஜ்
- த க்ரேஸ் அவேகனிங், சார்ல்ஸ் ஸ்வின்டால்
- த ச்பிஷியென்ஸி ஆ்ப் க்ரைஸ்ட், ஜான் மெக்ஆர்தர்
- ஹட்சன் டைலர்ஸ் ஸ்பிரிச்சுவல் சீக்ரட், Dr. மாற்றும் திருமதி ஹோவர்ட் டைலர்
- வீக்லி ஈ-டிவோஷனல் க்ரேஸ் நோட்ஸ், ஜான் வுட்வர்ட். www.GraceNotebook.com -ல் காணலாம்.
- ்பார் மீ டு லிவ் இஸ் க்ரைஸ்ட், க்ரூப் ஸ்டடி கோர்ஸ், சார்ல்ஸ் சாலமன்
- த க்ராஸ், யுவர் விக்டரி டுடே, CD தொடர், Dr. சார்ல்ஸ் ஸ்டேன்லி (Dr. ஸ்டேன்லியின் மற்றும் பல பிரசங்கங்கள்)
- த ஷாக்லிங் ஆ்ப் க்ரேஸ், லீ லெ்பெப்ரீ
- த எக்ஸ்சேஞ்ட் லை்ப் கான்்பரன்ஸ், CD தொடர், லீ லெ்பெப்ரீ
- ்ப்ரீ அட் லாஸ்ட், டோனி இவான்ஸ்
- Dr. டோனி இவான்ஸ் (பெரும்பாலான பிரசங்கங்கள்)
- கிரெகரி டிக்ஔவ் (பெரும்பாலான பிரசங்கங்கள்)
- ரோமன்ஸ்: சாப்டர்ஸ் 8-5, எனி வர்ஷன் ஆ்ப் த பைபிள்
- www.gracefellowshipintl.com
- www.thelifebookstore.com
- சீக்கிங் காட் த்ரூ ப்ரேயர் & மெடிடேஷன், டேவிட் ஹோவெல்
- ்புள்ளி அலைவ் அன்ட் ்பைனலி ்ப்ரீ, டேவிட் ஹோவெல்

Place Stamp Here

Prison Evangelism, Inc.
PO Box 571977 Houston,
Texas 77257

72019




நான் இன்னும் சற்று ஆழமாகப் படிக்க விரும்புகிறேன். எனக்கு “ஜெபத்திலும் தியானத்திலும் தேவனைத் தேடுதல்” என்னும் இலவச புத்தகத்தை அனுப்பி வைக்கவும்.

பெயர் ______________________________

முகவரி ____________________________

நகரம், மாநிலம், அஞ்சல் எண் ______

______________________________________

“தேவனுடைய பிள்ளையாக இருப்பது எப்படி” என்னும் புத்தகத்தைப் பற்றி நீங்கள் நினைப்பதை எங்களுக்குச் சொல்லவும் ________________________

______________________________________

______________________________________

______________________________________


______________________________________

______________________________________

______________________________________

______________________________________

# தேவனுடைய பிள்ளையாக இருப்பது எப்படி



கொடுக்கப்பட்டுள்ள எளிய சத்தியங்களை அனுபவித்து, தேவன் மீதான நம்பிக்கையும் விசுவாசமும் எவ்வாறு ஒரு நிறைவும், பரிபூரணமும் உள்ள வெற்றிகரமான வாழ்க்கைக்கு நடத்துகின்றன என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்தை
பயன்படுத்துவது எப்படி:

- தேவனுடன் சமாதானம் பெறுவதற்கான வழிகாட்டி
- இரட்சிப்பின் அனுபவத்தை புரிந்து கொள்ளும் வழி
- தனிப்பட்ட அல்லது குழு வேதபாடம் (223 வேதவசனங்கள் உள்ளன)
- கொடுக்கப்பட்ட உதாரணங்கள் மற்றும் வேதவசனங்களுடன் -30நாள் தியான வழிகாட்டி

இதை எழுதிய டேவிட் ஹோவெல் மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார். இந்தப் புத்தகத்தில் உள்ள தகவல்கள், அவர் பல ஆண்டுகள் சுயத்தை மையமாகக் கொண்டும், சுயத்தில் கவனம் செலுத்தியும் வாழ்ந்த பின்னர் இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றுக் கொண்ட பலத்தையும் நம்பிக்கையும் கொண்ட அவரது அனுபவத்தின் சாராம்சத்தைக் கொண்டுள்ளன. இதிலுள்ள எடுத்துக்காட்டுகள், வேதவசனங்கள் மற்றும் வேதப்பகுதிகள் மூலம் இயேசு கிறிஸ்துவையும் இரட்சிப்பின் அனுபவத்தையும் அறிந்து நம்புவது எப்படி வெற்றிகரமான பரிபூரண வாழ்க்கைக்கு நடத்தும் என்பதையும், இந்த உலகத்தில் எவ்வாறு தேவனுடன் சமாதானம் பெற்றிருக்க முடியும் என்பதையும் ஹோவெல் காண்பிக்கிறார்.

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.
கலாத்தியர் 2:20

ISBN 978-0-578-14157-2
90000>
9 780578 141572